**செ.வெ.எண்.84** **நாள்.28.09.2026**

**புதுக்கோட்டை மாவட்ட சிறையில் புதிதாக மதிப்பூதியத்தின் அடிப்படையில் சமூக இயல் வல்லுநர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, புதுக்கோட்டை, மாவட்ட சிறையில் புதிதாக மதிப்பூதியத்தின் (Honorarium) அடிப்படையில் (மாதம் ரூ.15,000/– ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) சமூக இயல் வல்லுநர் (Social Case Expert) பணியிடம் – 1 எண் நிரப்பம் செய்வதற்காக தகுதி உள்ள நபர்களிடமிருந்து விருப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>கல்வித் தகுதி மற்றும் வயது விவரம்:</u>**

முதுகலை பட்டப்படிப்பு (Social Work / Social Service / Social Science / Criminology / Sociology / Andragogy (Adult Education) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது இளங்கலை பட்டப்படிப்பு (Social Work / Social Service / Social Science / Criminology / Sociology) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் தொடர்புடைய பாடப்பிரிவில் பட்டயப் படிப்பு (Diploma in Social Work / Social Service / Social Science / Criminology / Sociology) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிரிவு : பொதுப்பிரிவு முன்னுரிமை அற்றவர் (வயது வரம்பு 01.07.2026 அன்றைய தேதியில் பின்வருமாறு நிறைவுற்றிருக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது ): ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / அருந்ததியர் (SC / ST / SCA): 35 வயது , பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (BC / MBC): 32 வயது மற்றும் இதர பிரிவினர் / பொதுப்பிரிவினர் (OC): 30 வயது. மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அனைத்து கல்விச் சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 28.09.2026 முதல் 12.10.2026 அன்று மாலை 05.45 மணி வரையில் கீழ்க்கண்ட முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>**

கூடுதல் கண்காணிப்பாளர் (பொ), மாவட்ட சிறை, புதுக்கோட்டை – 622 001. தொலைபேசி எண்.04322 222220. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai